**TNVR020017212019**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.2, திருவில்லிபுத்தூர்.

முன்னிலை – செல்வி.தி.சுபாஷினி., B.Com., L.L.B (Hons)., L.L.M.,
நீதித்துறை நடுவர் எண்.II, திருவில்லிபுத்தூர்.
2026-ஆம் ஆண்டு மார்ச் மாதம் 11-ஆம் நாள் புதன்கிழமை
ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்.395/2019

| | | | |
|---|---|---|---|
| குற்றமுறையிடுபவர் | | அரசுக்காக / காவல் சார்பு ஆய்வாளர்/ திருவில்லிபுத்தூர் நகர் காவல் நிலையம்/ குற்ற எண்.497/2017 | |
| குற்றம்சாட்டப்பட்டவர்களின் பெயர்கள் | | வைரமுத்து, (21/17), த/பெ.சுந்தர்ராஜன், 159 நெசவாளர் காலனி, திருவில்லிபுத்தூர். | |
| சம்பவம் நடந்த நாள் | | 03.08.2017 | |
| புகார் கொடுக்கப்பட்ட நாள் | | 05.08.2017 | |
| எதிரி | | கைதான நாள் | பிணையில் சென்ற நாள் |
| | | 05.08.2017 | 17.08.2017 |
| அரசு தரப்பு விசாரணை முடிவுற்ற நாள்<br><br>எதிரி தரப்பு விசாரணை முடிவுற்ற நாள் | –<br><br>– | 06.03.2026<br><br>இல்லை | |
| எதிரி மீது குற்றச்சாட்டு வனையப்பட்ட நாள் | – | 17.05.2019 | |
| குற்றம் | | | |
| 1. சாட்டப்பட்டது | – | எதிரி மீது இதச பிரிவு 379 உ/இ 34–ன் கீழ் | |
| 2. வனையப்பட்டது | – | எதிரி மீது இதச பிரிவு 379 உ/இ 34–ன் கீழ் | |
| காலதாமதத்திற்கான காரணம் | – | சாட்சி விசாரணைக்காக தாமதம் | |

SUBASHINI T — Digitally signed by SUBASHINI T

| | | |
|---|---|---|
| அரசு தரப்பு சாட்சிகள் விசாரணை பற்றிய விவரங்கள் | – | அ.சா.1 03.01.2026 ம் தேதி முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை.<br><br>அ.சா.2 09.02.2026 ம் தேதி முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை.<br><br>அ.சா.3 09.02.2026 ம் தேதி முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை<br><br>அ.சா.4 06.03.2026 ம் தேதி முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை |
| எதிரியிடம் கு.வி.மு.ச. பிரிவு 313(1)(ஆ)ன் படி விசாரணை செய்யப்பட்ட நாள் | – | 09.03.2026 |
| எதிரி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட கு.வி.மு.ச. பிரிவு 311 பிரிவின் படியான மனுக்கள் | – | இல்லை |
| அரசு தரப்பு வழக்கறிஞர் | – | திருமதி.P.பெத்துரதி, M.B.A., B.L., |
| எதிரி தரப்பு வழக்கறிஞர் | – | திருமதி.P. சரிதா, M.A., B.L., |
| எதிரிகளின் கூற்று | – | எதிரி குற்றத்தை மறுத்து பொய் வழக்கு என்று கூறினார். |

SUBASHINI T

Digitally signed by SUBASHINI T

| | | |
|---|---|---|
| நீதிமன்றத்தின் முடிவு | – | முடிவாக, இவ்வழக்கில் அரசு தரப்பு வழக்கு சம்பவத்தை குறித்து தெளிவான சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்க தவறிவிட்டதாக தீர்மானித்து, எதிரி மீதான இதச சட்டப்பிரிவு 379 உ/இ 34–ன் கீழான குற்றத்திற்கு குற்றவாளி இல்லை என்று முடிவு செய்து, எதிரியை குவிமுச பிரிவு 248(1)-ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.<br><br>இவ்வழக்கு சொத்தான சா.பொ.1 ஆன TN 67 AT 3678 என்ற Yamaha இருசக்கர வாகனம் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு பி.ஆர்.எண்.535/2018 வழங்கப்பட்டு அதனை CRMP.No.4803/2018 மனுவினை தாக்கல் செய்து அதில் பிறப்பித்த உத்தரவின் படி அதன் உரிமையாளரான மீனாட்சி என்பவர் இடைக்காலமாக பெற்றுச்சென்றுள்ளார். அதனை மேல்முறையீட்டு காலத்திற்கு பின் அவரே நிரந்தரமாக வைத்துக் கொள்ளுமாறு உத்தரவிடப்படுகிறது.<br><br>எதிரி எழுதிக் கொடுத்த பிணை பத்திரம் மேல்முறையீட்டு காலத்திற்குப் பின்னர் இரத்தாகும் என உத்தரவிடப்படுகிறது. |

இவ்வழக்கு சம்பவத்தில் ஈடுபட்ட மற்ற இரண்டு எதிரிகள் இளஞ்சிறார்கள் என்பதால் அவர்களை பொருத்தமட்டில் வழக்கானது இளஞ்சிறார் குழுமத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இவ்வழக்கானது 14.03.2019 ம் தேதியன்று இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கப்பட்டு, என் முன்பாக 06.03.2026 ம் தேதியன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது, அரசு தரப்பில் கற்றறிந்த அரசு குற்றவியல் வழக்கறிஞர் நிலை–2 திருமதி.P.பெத்துரதி, M.B.A., B.L., அவர்கள் முன்னிலையாகியும், எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திருமதி.P. சரிதா, M.A., B.L., அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதங்களை கேட்டும், இதுநாள் வரையில் என் சீரிய பரிசீலனையில் இருந்து வந்தும், ஆவணங்களை ஆராய்ந்தும், இறுதி பரிசீலனைக்குப்



SUBASHINI T Digitally signed by SUBASHINI T

பின் இன்று இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு பிறப்பிக்கும்.........

**தீர்ப்புரை**

இவ்வழக்கு கடந்த 03.08.2017 ம் தேதி இரவு 10.00 மணிக்கு புகார்தாரருக்கு சொந்தமான TN 67 AT 3678 Yamaha Fazar (Red Colour) இருசக்கர வாகனத்தை திருவில்லிபுத்தூர் வாழைக்குளம் தெருவில் தனது வீட்டு முன்பு நிறுத்திவிட்டு வீட்டிற்கு தூங்கச் சென்றுள்ளார் என்றும், அன்று இரவு 1வது எதிரி மற்றும் 2, 3 வதாக குற்றம் சாட்டப்படும் இளஞ்சிறார்களுடன் சேர்ந்து புகார்தாரருக்கு சட்டப்பூர்வமற்ற இழப்பு ஏற்படுத்த வேண்டும் என்ற எண்ணத்தில் ஆதாயம் கருதி திருடிச் சென்ற குற்றத்திற்காக திருவில்லிபுத்தூர் காவல் நிலைய சார்பு ஆய்வாளர் அவர்கள் எதிரி மீது இதச பிரிவு 379 உ/இ 34–ன் கீழ் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) வழக்கு கோப்பில் எடுக்கப்பட்டு எதிரிக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது. மேற்படி அழைப்பாணையின் படி எதிரி ஆஜராக, எதிரிக்கு அரசு தரப்பில் தாக்கல் செய்துள்ள ஆவணங்களின் நகல்கள் குவிமுச பிரிவு 207 ன் கீழ் இலவசமாக வழங்கப்பட்டது. பின்னர் எதிரிக்கு போதிய கால அவகாசம் வழங்கி எதிரி மீதான குற்றச்சாட்டினை விசாரணை செய்வதற்கு போதிய முகாந்திரம் இருந்தபடியால், எதிரி மீது இதச பிரிவு 379 உ/இ 34–ன் கீழ் குற்றச்சாட்டு வனையப்பட்டு அவரிடம் குற்றம் குறித்து வினாவிய போது எதிரி குற்றத்தை மறுத்து பொய் வழக்கு என்றும், குற்றவாளி இல்லை என்றும் கூறியதால் அரசு தரப்பு சாட்சிகள் விசாரணைக்கு வழி வகை செய்யப்பட்டது.

3) அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.4 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டும் அவர்கள் மூலம் அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.13 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. அரசு தரப்பில் சா.பொ.1 ம் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**4) அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் சாட்சியங்களின் சுருக்கம்:–**



SUBASHINI T
Digitally signed by SUBASHINI T

(I) அ.சா.1 திரு.பொன்தினேஷ் தனது சாட்சியத்தில், ஆஜர் எதிரியை தனக்கு தெரியாது என்றும், கடந்த 2017ம் ஆண்டு ஒரு நாள் தனது இருசக்கர வாகனம் காணாமல் போய்விட்டதால், அது சம்மந்தமாக காவல்நிலையத்தில் புகார் கொடுத்திருந்ததாகவும், அதன் பின்பு மறுநாள் தன்னிடம் ஒரு தாளில் எழுதி கையெழுத்து மட்டும் பெற்றார்கள் என்றும், ஒரு வாரம் கழித்து தனது இருசக்கர வாகனம் கிடைத்துவிட்டதாக காவல்நிலையத்திலிருந்து தனக்கு தகவல் தெரிவித்தார்கள் என்றும், போலீசார் தன்னை விசாரிக்கவில்லை என்றும், கையெழுத்து மட்டும் தான் பெற்றார்கள் என்றும், தன்னிடம் காட்டப்படும் புகார் மனுவிலுள்ள கையெழுத்து தன்னுடையது தான் என்றும், புகார் மனுவிலுள்ள கையெழுத்து மட்டும் அசாஆ.1 என்று சாட்சியம் அளித்துள்ளார்.

(ii) அ.சா.2 திரு.குருராகவேந்திரன் தனது சாட்சியத்தில், தன்னிடம் காட்டப்படும் ஆவணங்களிலுள்ள முதலாவது கையெழுத்து தன்னுடையது தான் என்றும், இவ்வழக்கு சம்மந்தமாக தனக்கு எதுவும் தெரியாது என்றும், தான் போலீசார் கேட்டுக்கொண்டதால் கையெழுத்து செய்து கொடுத்ததாகவும், மற்றபடி தனக்கு எதுவும் தெரியாது என்றும், ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள முதலாவது கையெழுத்து அசாஆ.2 என்றும், அத்தாட்சியிலுள்ள முதலாவது கையெழுத்து அசாஆ.3 என்றும், போலீசார் என்னை விசாரிக்கவில்லை சாட்சியம் அளித்துள்ளார்.

(iii) அ.சா.3 திரு.லட்சுமணன் தனது சாட்சியத்தில், தன்னிடம் காட்டப்படும் ஆவணங்களிலுள்ள இரண்டாவது கையெழுத்து தன்னுடையது தான் என்றும், இவ்வழக்கு சம்மந்தமாக தனக்கு எதுவும் தெரியாது என்றும், தான் போலீசார் கேட்டுக்கொண்டதால் கையெழுத்து செய்து கொடுத்ததாகவும், மற்றபடி தனக்கு எதுவும் தெரியாது என்றும், ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள இரண்டாவது கையெழுத்து அசாஆ.4 என்றும், அத்தாட்சியிலுள்ள இரண்டாவது கையெழுத்து அசாஆ.5 என்றும், போலீசார் தன்னை விசாரிக்கவில்லை என்று சாட்சியம் அளித்துள்ளார்

(iv) அ.சா.4 திரு.முருகராஜ் தனது சாட்சியத்தில், தனது சாட்சியத்தில், தான் தற்போது திருவில்லிபுத்தூர் நகர் காவல்நிலையத்தில சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருவதாகவும், இதற்கு முன்பு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த சிறப்பு சார்பு



SUBASHINI T Digitally signed by SUBASHINI T

ஆய்வாளர் கனகராஜ் என்பவரும் புலன் விசாரணை அதிகாரியான சார்பு ஆய்வாளர் ரமேஷ் என்பவரும் பணிமாறுதலில் சென்றுவிட்டபடியால், வழக்கின் காலதாமதத்தை கருத்தில்கொண்டு அவர்கள் தாக்கல் செய்த ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிப்பதாகவும், கடந்த 05.08.2017 ம் தேதி 08.00 மணிக்கு சிறப்பு சார்பு ஆய்வாளர் கனகராஜ் நிலைய பொறுப்பில் இருந்தபோது சங்கரலிங்கம் மகன் பொன் தினேஷ் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று அதன் தன்மைக்கேற்ப நிறைய குற்ற எண்.497/2017 பிரிவு 379 இதச ஆக வழக்கு பதிவு செய்துள்ளார் என்றும், புகார் மனு அசாஆ.6 என்றும், முதல் தகவல் அறிக்கை அசாஆ.7 என்றும், அதன் முதல் தகவல் அறிக்கையின் அசலையும் புகார் மனுவையும் சம்பந்தப்பட்ட நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்தும் மற்ற நகல்களை உயர் அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்துள்ளார் என்றும், மேல் விசாரணைக்காக சார்பு ஆய்வாளர் ரமேஷ் அவர்களின் பார்வைக்கு வைத்துள்ளார் என்றும், பின்பு இவ்வழக்கு கோப்பினை சார்பு ஆய்வாளர் ரமேஷ் அவர்கள் மேல் விசாரணைக்கு எடுத்துக் கொண்டு 05.08.2017 ஆம் தேதி 09.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சம்பவ இடத்தை பார்வையிட்டு சாட்சிகள் ராஜ சங்கரலிங்கம், வினோத் பாபு, ஆகியோர்கள் முன்னிலையில் பார்வை மகஜர் மற்றும் மாதிரிவரைபடம் தயார் செய்துள்ளார் என்றும், பார்வை மகஜர் அசாஆ.8 என்றும், வரைபடம் அசாஆ.9 என்றும், பின்பு சாட்சிகள் பொன்தினேஷ், சக்தி பாலு, ராஜ சங்கரலிங்கம், வினோத்பாபு ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார் என்றும், சாட்சிகள் வாக்குமூலங்களில் இருந்து சம்பவம் உண்மை என தெரிந்தபடியால் காணாமல் போன இருசக்கர வாகனத்தை தேடி வந்த நிலையில் 05.08.2017 ம் தேதி 11.00 மணிக்கு சார்பு ஆய்வாளர் ரமேஷ் மற்றும் போலீஸ் பார்ட்டி சகிதம் திருவில்லிபுத்தூர் டு மதுரை ரோட்டில் உள்ள பட்டத்தரசி அம்மன் கோவில் அருகில் வாகன தணிக்கை செய்து கொண்டிருந்தபோது சந்தேகத்திற்கு இடமான சிவப்பு கலர் இரு சக்கர வாகனத்தை உருட்டிக்கொண்டு வந்த பின்னால் விசாரித்து தெரிந்த வைரமுத்து, மாரிச்செல்வம், சதீஷ்குமார் ஆகிய மூன்று நபர்கள் போலீஸ் பார்ட்டியை பார்த்ததும் வண்டியை திருப்பியவர்களை பிடித்து விசாரிக்க மேற்படி வழக்கில் காணாமல் போன TN 67 AT 3678 என்று எண் கொண்ட yamaha fazar Red



SUBASHINI T Digitally signed by SUBASHINI T

colour இருசக்கர வாகனத்தை திருடி எடுத்து வந்ததாக கூறியதால் மேற்படி எதிரிகளை 11.00 மணிக்கு கைது செய்து அதில் வைரமுத்து என்பவரை விசாரித்த போது எவ்வித அச்சுறுத்தலும் துன்புறுத்தலும் ஆசை வார்த்தைகளுமின்றி அவர் தானாக முன்வந்து ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்துள்ளார் என்றும், 11.15 மணிக்கு ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சிகள் குருராகவேந்திரன் மற்றும் லட்சுமணன் ஆகியோர்கள் முன்னிலையில் பதிவு செய்துள்ளார் என்றும், ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக் கப்பட்ட பகுதி அசாஆ.10 என்றும், அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் பேரில் 05.08.2017 ம் தேதி 12:30 மணிக்கு அதை சாட்சிகள் முன்னிலையில் மேற்படி வாகனத்தை அத்தாட்சியின் பேரில் கைப்பற்றியுள்ளார் என்றும், அத்தாட்சி அசாஆ.11 என்றும், மேற்படி TN 67 AT 3678 இருசக்கர வாகனம் சாபொ.1 என்றும், மேற்படி சாட்சிகள் குருராகவேந்திரன் மற்றும் லட்சுமணன் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார் என்றும், எதிரிகள் மற்றும் சொத்துக்களுடன் நிலையம் வந்து உரிய பதிவுகளுக்கு பின்பு எதிரி வைரமுத்து தக்கவழி காவல் மூலம் நீதிமன்ற காவல் அடைப்புக்கு உட்படுத்தியுள்ளார் என்றும், அன்றைய தேதியில் மற்ற சிறார் இளைஞர் நீதிமன்றத்திற்கு உரிய பதிவிற்கு பின்பு அனுப்பி கடந்த 11.09.2018 ஆம் தேதி சிறப்பு சார்பாய்வாளர் கனகராஜ் என்பவர் விசாரித்து வாக்கு மூலம் பதிவு செய்துள்ளார் என்றும், இவ்வழக்கு சொத்தை படிவம்91 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பியுள்ளார் என்றும், படிவம் 91 அசாஆ.12 என்றும், எதிரிகள் திருட வேண்டும் என்ற நோக்கத்தில் மூவரும் ஒன்று சேர்ந்து இருசக்கர வாகனத்தில் இந்திய வழக்கில் தட்டப்பார்வை 379 உ/இ 34 இதச ஆக மாற்றம் செய்து சட்டமாறுதல் அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றும், சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அசாஆ.13 என்றும், சம்பவம் உண்மை என தெரிந்தபடியால் 1வது எதிரி மீது 379 உ/இ 34 பிரிவாக குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

5) அரசு தரப்பில் விசாரிக்கப்பட்டுள்ள சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து எதிரிக்கு பாதகமான சங்கதிகள் குறித்து குவிமுச 313 (1) (ஆ) பிரிவின் கீழ் விசாரித்தபோது எதிரி பொய் சாட்சியம் என்றும், தனது தரப்பில் விசாரிக்க சாட்சிகள்



SUBASHINI T Digitally signed by SUBASHINI T

யாரும் இல்லை எனக் கூறிக் கொண்டார். எதிரி தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் மற்றும் சான்றுபொருள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை. இருதரப்பிலும் வாதுரைகள் கேட்கப்பட்டது.

6**) தீர்வுக்குறிய பிரச்சனை :–**

அரசு தரப்பில் எதிரி மீது இதச பிரிவு 379 உ/இ 34 –ன் கீழ் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் தகுந்த சாட்சிய சான்றாவணங்கள் வாயிலாக சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளதா என்பதே தீர்வு செய்யப்படவேண்டிய பிரச்சனை ஆகும்.

7. இவ்வழக்கு கடந்த 03.08.2017 ம் தேதி இரவு 10.00 மணிக்கு புகார்தாரருக்கு சொந்தமான TN 67 AT 3678 Yamaha Fazar (Red Colour) இருசக்கர வாகனத்தை திருவில்லிபுத்தூர் வாழைக்குளம் தெருவில் தனது வீட்டு முன்பு நிறுத்திவிட்டு வீட்டிற்கு தூங்கச் சென்றுள்ளார் என்றும, அன்று இரவு 1வது எதிரி மற்றும் 2, 3 வதாக குற்றம் சாட்டப்படும் இளஞ்சிறார்களுடன் சேர்ந்து புகார்தாரருக்கு சட்டப்பூர்வமற்ற இழப்பு ஏற்படுத்த வேண்டும் என்ற எண்ணத்தில் ஆதாயம் கருதி திருடிச் சென்றார் என்பதே அரசு தரப்பு வழக்காகும்.

8. இவ்வழக்கின் புகார்தாரரான அ.சா.1 தனது சாட்சியத்தில் ஆஜர் எதிரியை தனக்கு தெரியாது என்றும், கடந்த 2017 ம் ஆண்டு ஒரு நாள் தனது இருசக்கர வாகனம் காணாமல் போய்விட்டதால், அது சம்மந்தமாக காவல்நிலையத்தில் புகார் கொடுத்திருந்ததாகவும், அதன் பின்பு மறுநாள் தன்னிடம் ஒரு தாளில் எழுதி கையெழுத்து மட்டும் பெற்றார்கள் என்றும், ஒரு வாரம் கழித்து தனது இருசக்கர வாகனம் கிடைத்துவிட்டதாக காவல்நிலையத்திலிருந்து தனக்கு தகவல் தெரிவித்தார்கள் என்றும், போலீசார் தன்னை விசாரிக்கவில்லை என்றும், கையெழுத்து மட்டும் தான் பெற்றார்கள் என்றும், தன்னிடம் காட்டப்படும் புகார் மனுவிலுள்ள கையெழுத்து தன்னுடையது தான் என்று சாட்சியம் அளித்து



SUBASHINI T Digitally signed by SUBASHINI T

பிறழ்சாட்சியாக மாறியுள்ளார். மேற்படி அ.சா.1ன் சாட்சியத்திலிருந்து எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள குற்றத்தை நிரூபிக்கும் வகையில் எந்தவித சாட்சியமும் இடம் பெறவில்லை. அ.சா.1யை அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்த போதும் அரசு தரப்பிற்கு ஆதரவாக எந்தவித சாட்சியம் அளிக்கவில்லை.

9. ஒப்புதல் வாக்குமூல சாட்சிகளான அ.சா.2 மற்றும் அ.சா.3 ஆகியோர் அவர்களது சாட்சியத்தில், இவ்வழக்கு சம்பவம் பற்றி தங்களுக்கு எதுவும் தெரியாது என்று கூறி அரசுதரப்பிற்கு எதிராக பிறழ்சாட்சியம் அளித்துள்ளார்கள். அவர்களை அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்த போதும் அரசு தரப்பிற்கு ஆதரவாக எந்தவித சாட்சியமும் அளிக்கவில்லை.

.

10 இவ்வழக்கில் புலன் விசாரணை செய்து, எதிரி மீது இறுதி அறிக்கை தாக்கல் செய்தது பற்றி கோப்புகளின் அடிப்படையில் சாட்சியம் அளித்த அசா.4 சாட்சியத்தை மட்டுமே வைத்து எதிரி மீதான குற்றச்சாட்டுக்கள் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டுவிட்டதாக தீர்மானிக்க இயலாது. இவ்வழக்கின் புகார்தாரரான அ.சா.1 ம் ஆஜர் எதிரியை தெரியாது என்று கூறி அரசு தரப்பிற்கு எதிராக பிறழ்சாட்சியம் அளித்துள்ளதை கருத்தில் கொண்டும், இவ்வழக்கில் ஒப்பதல் வாக்குமூல சாட்சிகளான அ.சா.2 மற்றும் அ.சா.3 ஆகியோர் அரசு தரப்பிற்கு எதிராக பிறழ்சாட்சியம் அளித்துள்ளதை கருத்தில் கொண்டும், இவ்வழக்கு சம்பவத்தில் எதிரி தான் குற்றவாளி என முடிவு செய்ய போதிய சாட்சிகளும், சான்றாவணங்களும் போதுமானதாக இல்லை என்பதாலும், எதிரி மீதான குற்றம் சந்தேகத்திற்கு இடமின்றி அரசு தரப்பில் நிரூபிக்கப்படவில்லை என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. எனவே சந்தேகத்தின் பலனை எதிரிக்கு வழங்கி அவரை இவ்வழக்கிலிருந்து விடுதலை செய்வதே நீதியின் நலனுக்கு உகந்தது என இந்நீதிமன்றம் கருதுகிறது.

11. முடிவாக, இவ்வழக்கில் அரசு தரப்பு வழக்கு சம்பவத்தை குறித்து தெளிவான சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் சந்தேகத்திற்கு இடமின்றி



SUBASHINI T
Digitally signed by SUBASHINI T

நிரூபிக்க தவறிவிட்டதாக தீர்மானித்து, எதிரியின் மீதான இதச சட்டப்பிரிவு 379 உ/இ 34–ன் கீழான குற்றத்திற்கு குற்றவாளி இல்லை என்று முடிவு செய்து, எதிரியை குவிமுச பிரிவு 248(1)-ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

12. இவ்வழக்கு சொத்தான சா.பொ.1 ஆன TN 67 AT 3678 என்ற Yamaha இருசக்கர வாகனம் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு பி.ஆர்.எண்.535/2018 வழங்கப்பட்டு அதனை CRMP.No.4803/2018 மனுவினை தாக்கல் செய்து அதில் பிறப்பித்த உத்தரவின் படி அதன் உரிமையாளரான மீனாட்சி என்பவர் இடைக்காலமாக பெற்றுச்சென்றுள்ளார். அதனை மேல்முறையீட்டு காலத்திற்கு பின் அவரே நிரந்தரமாக வைத்துக் கொள்ளுமாறு உத்தரவிடப்படுகிறது.

13. எதிரி எழுதிக் கொடுத்த பிணை பத்திரம் மேல்முறையீட்டு காலத்திற்குப் பின்னர் இரத்தாகும் என உத்தரவிடப்படுகிறது.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு, 2026 ம் வருடம் மார்ச் மாதம் **11** ம் நாளாகிய இன்று திறந்த இந்நீதிமன்றத்தில் என்னால் அவையறிய பகரப்பட்டது.

SUBASHINI T Digitally signed by SUBASHINI T

நீதித்துறை நடுவர் எண்.II,
திருவில்லிபுத்தூர்.

**1. அரசுத் தரப்பு சாட்சிகள் –**

| | | |
|---|---|---|
| அ.சா.1 | – | திரு.பொன்திநேஷ் |
| அ.சா.2 | – | திரு.குருராகவேந்திரன் |
| அ.சா.3 | – | திரு.லட்சுமணன் |
| அ.சா.4 | – | திரு.முருகராஜ் |

**2. அரசுத் தரப்பு சான்றாவணங்கள் –**

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | – | புகார் மனுவில் உள்ள அ.சா.1 ன் கையொப்பம் |



SUBASHINI T Digitally signed by SUBASHINI T

அ.சா.ஆ.2 – ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள அ.சா.2 ன் கையொப்பம்

அ.சா.ஆ.3 – அத்தாட்சியில் உள்ள அ.சா.2 ன் கையொப்பம்

அ.சா.ஆ.4 – ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள அ.சா.3 ன் கையொப்பம்

அ.சா.ஆ.5 – அத்தாட்சியில் உள்ள அ.சா.3 ன் கையொப்பம்

அ.சா.ஆ.6 – புகார்மனு

அ.சா.ஆ.7 – முதல் தகவல் அறிக்கை

அ.சா.ஆ.8 – பார்வை மகஜர்

அ.சா.ஆ.9 – வரைபடம்

அ.சா.ஆ.10 – ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி

அ.சா.ஆ.11 – அத்தாட்சி

அ.சா.ஆ.12 – படிவம் 91

அ.சா.ஆ.13 – சட்ட பிரிவு மாறுதல் அறிக்கை

**3. அரசு தரப்பு சான்று பொருள்** –

சா.பொ.1 – TN 67 AT 3678 என்ற எண் கொண்ட இருசக்கர வாகனம்

**4. எதிரி தரப்பு சாட்சிகள் சான்றாவணங்கள் மற்றும் சான்றுபொருள்** –இல்லை.

SUBASHINI T Digitally signed by SUBASHINI T

நீதித்துறை நடுவர் எண்.II,
திருவில்லிபுத்தூர்.

| | |
|---|---|
| 1. | எந்த சாட்சியும் 3 முறைக்கு மேல் நிறுத்தப்படவில்லை. |
| 2. | வழக்கின் முடிவு பற்றி காவல்துறையினருக்கு தெரிவிக்கப்பட்டது. |
| 3. | நடுவர் தீர்ப்புரையின் அனைத்து பக்கங்களிலும் கையொப்பமிட்டுள்ளார். |
| 4. | இவ்வழக்கில் வழக்குச் சொத்துக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. |
| 5. | வழக்கு விசாரணையின்போது எதிரி பிணையில் இருந்தார். |